Reg No. M. 2997.

தனிப்பிரதி அணா 1

ஆசிரியர்:
யாழ்ப்பாணம்
தென்கோவை
ச. கந்தையபிள்ளை
தமிழ்ப் பண்டிதர்,
சிலோன்.

REPUBLIQUE FRANÇAISE

Liberté - Egalité - Fraternité

VITTAGAM

LE REDACTEUR
TENKOVAI
S. CANDIAH PILLAI
TAMIL PANDIT
JAFFNA
CEYLON.

JOURNAL HEBDOMADAIRE PARAISSANT LE JEUDI

வித்தகம்

வியாழக்கிழமைதோறும் வெளிவருவது

Bureau de la Direction:—
RUE D'AMBALATADOU AYER
MADAM NO. 4, Pondichery.

நத்தம்போற் கேடு முளதாகுஞ் சாக்காடும்
வித்தகர்க் கல்லா லரிது. குறள்.

காரியாலயம்:—
அம்பலத்தாடு ஐயர் மடத்து வீதி
நெ. 4. புதுவை.

VOL I. புதுவை. பவ-௵ ஐப்பசி-௴ ௧௬ ௳ (1—11—34) No. 49.

திருமந்திரம்

தளிர்க்கு மொருபிள்ளை தட்டா னகத்தில்
விளிப்பதோர் சங்குண்டு வேந்தனை நாடிக்
களிக்குங் குசவர்க்குங் காவிதி யார்க்கு
மளிக்கும் பதத்தோன் றுய்ந்துகொள் வார்க்கே.

குடைவிட்டுப் போந்தது கோயி லெருமை
படைகண்டு மீண்டது பாதி வழியி
லுடையவன் மந்திரி யுள்ளது மூரா
ரடையா கெடுங்கடை யைந்தொடு நான்கே.

போகின்ற வெட்டும் புகுகின்ற பத்தெட்டு
மாகப் படைத்தன வொன்பது வாய்தலு
நாகமு மெட்டொடு நாலு புரவியும்
பாகன் விடாவிடிற் பன்றியு மாமே.

பாசி படர்ந்து கிடந்த குளத்திடைக்
கூசி யிருக்குங் குருகிரை தேர்ந்துண்ணு
மூசி மறவன் றனைவழி யெய்திடப்
பாசங் கிடந்து பதைக்கின்ற வாறே.

கும்ப மலைமே லெழுந்ததோர் கொம்புண்டு
கொம்புக்கு மப்பா லடிப்பதோர் காற்றுண்டு
வம்பாய் மலர்ந்ததோர் பூவுண்டப் பூவுக்குள்
வண்டாய்க் கிடந்து மணங்கொள்வ னீசனே.

வினையுந் தண்டும் விரவி யிசைமூர
முனைவு மேவித் தகுதலைப் பெய்தது
வாணிபஞ் சிக்கென் றதுவடை யாதுன்னங்
காணியு மங்கே கலக்கின்ற வாறே.

உ
திருவருள் துணை

காலமுண் டாகவே காதல்செய்
துய்மின் கருதரிய
ஞாலமுண் டானெடு நான்முகன்
வானவர் நண்ணரிய
ஆலமுண் டானெங்கள் பாண்டிப்
பிரான்றன் அடியவர்க்கு
மூலபண் டாரம் வழங்குகின்
ருன்வந்து முந்துமினே.
(திருவாசகம்.)

வித்தகம்

புதுவை.
பவ-ஞு ஐப்பசி-மீ 16உ

காயசித்தி

காயசித்தி என்ருல் என்னே? அது தான் சரீரம் வசப்படுதல்—விமலமாதல் என்று கூறப்படும். காயம் என்பது அஞ்ஞான வடிவாகிய அசுத்த தநுவையே குறிக்கும். க+ஆயம்=காயம். க=பசுத்துவம்—அஞ்ஞானம்-இருள். ஆயம்=உரிமை—உரிய இடம். ஆகவே பசுத்துவமாகிய அஞ்ஞானத்துக்கு அஞ்ஞானம் ஏன்னும் அழுக்குக்கு உரிமையானதே—உரிய இடமே காயம் எனப்படும் என்பது. பிறப்பு வளர்ச்சி (அசுத்த நிறையின் ஆதிக்கம்) பசி களை திரை பிணி மூப்பு சாக்காடு என்னும் ஊனங்களே பசுத்துவம் எனப்படுவன. இவ் ஊனங்கள் நீங்குவதே—மாற்றமடைவதே அஃதாவது மலம் விமல மாதலே—பாசமே ஞானமாகிப் பயன்படுவதே காயசித்தி எனப்படும் என்பது. உலகத்திலே பலர் "காயசித்தி" அடைய வேண்டியது எற்றிற்கு? அருந்தல் பொருந்தல் முதலிய நியமம்—நிறைமுறை எற்றிற்கு? காயசித்தி பெருமல் முத்தியடைய முடியாதா? காய சித்திக்கும் முத்திக்கும் என்ன தொடர்பு?" என்று இன்னோரன்ன பல பேசிச் சர்ச்சை விளைப்பர். இவ்வாறு பேசிச் சர்ச்சை விளைப்போரும் தாம் சுகமாக வாழ்தற் பொருட்டுப் பிணி முதலியவற்ருல் நலியாது இருக்க வேண்டும் என்றே ஆசைப்பட்டுத் தற்சுதந்தரத்தால் காயத்தை வசப்படுத்த முயலுகின்றனர். ஒவ்வொருவரும் தம் தம் அறிவுக்கு எட்டியமட்டில் உணவு மருந்து முதலியவற்ருலும் சரீராப்பியாசம் மூச்சுப்பயிற்சி முதலியவற்ருலும் சரீரத்தை வசப்படுத்தவே முயலுகின்றனர். தாம் சுகமாக நீடுவாழ வேண்டும் என்ற எண்ணம் எவருக்கும் இல்லாமல் இருப்பதில்லை. சிவ முயற்சியால் கண்டுபிடிக்கப்படும் உணவுகளாலும் (அருந்தல் பொருந்தல்) மருந்துகளாலும் சரீர அப்பியாசம் மூச்சுப் பயிற்சி முதலியவற்ருலும் ஆரம்பத்தில் நலம் ஆக்க முறுவது போலத் தோன்றினும், காயத்துள்ள பௌதிக பஞ்சீகரணிப்பின் நிறைபேதத்தை மாற்றுதற்கு ஏற்ற சாதகம் கைக் கொள்ளப்படாமையாலும் ருக்குமம் ஆக்கமுருது கேடடைதலாலும் காயசித்தி ஏற்படாது பிணி மூப்புக்களால் மரணமே உளதாகின்றது. பௌதிகங்களின் பஞ்சீகரணநிறைபேதமே (அசுத்த நிறை) பிரவிருத்திக்குக் (பிறவி நெறி) காரணமாதலின், அப்பௌதிகநிறை பேதத்தைச் சமப்படுத்தி அவற்றை தூயவாக்கி (அமலம்) வசப்படுத்தி நிவிர்த்தி (முத்தி)பெறற் பொருட்டும் இனமான முன்னிலைகளை நிறைகண்டு பஞ்சீகரணித்தல் இன்றியமையாததென்பது சொல்லாதே அமையும் அல்லவா? இருவினை வடிவாகிய சரீரம் வசப்படாதபோது அதனைப் பற்றிய காமம் கோபம் முத லிய தீய குணங்கள் மாற்றமடைய முடியாது. வினைகள் சமப்படுதலாகிய இருவினை ஒப்பும் மலபரிபாகமும் அமையமுடியாது. இவை அமையப் பெருதபோது ஞான சத்தியாகி அருட்சத்தி ஆக்கமுறுதலாகிய சத்தி நிபாதமும் வீடும் கைகூடமாட்டா. மரணமே—பிறவிநெறியே உளதாகும் என்க. சாக்காட்டைத் தரும் பிணி கட்கு இடமாகிய நமது அசுத்த சரீ மாகிய காயம் வசப்படாது இருத்த குக் காரணம் யாது என அஃதாவது எவ்வெப் பௌதிக நிறை எவ்வெ ஏற்ற இறக்க நிறையாகிப் பொலி திருக்கின்றன என்று சிற்றறிவுடை ராகிய நாம் அறிதல் முடியாத காரியமே! எல்லா அறிவும் எல்லா முதன் மையுமுடைய சற்குருநாதனாகிய ப ரோக வைத்தியனே இவற்றையும் இவற்ருல் வரும் துன்பங்களை ஒழிக் கும் உபாயத்தையும் அறிய வல்லவன்,

குறள்

நோய்நாடி நோய்முதனாடி யதுதணிக்கு
வாய்நாடி வாய்ப்பச் செயல்.

(ஷ 95-ம் அதி, மருந்து. செ. 8)

என்றனர் நமது பொய்யில் புலவர். சரீரநிலையால் நோயையும் அதற்கு காரணமான சரீர பௌதிகப் பஞ்சீ ரண பேதங்களையும் அவற்றை சமப்படுத்துதலால் அந் நோயை மா றும் உபாயத்தினையும் பூரணமா அறிந்து நிறைமுறை தவருது சிகி சை செய்வதே மருத்துவன் கட என்பது இதன் பொருளாகும். இ வாறு வாய்மையான சிகிச்சை செ யப்பட்டபோது காயம் விமலவமா அமலமாய் வசப்படும், வாய்மையா காயசித்தி உளதாகும்—நித்தியத் வம் உளதாகும் என்பது சித்தமூர் திகளாகிய தத்துவப்பெரியார் துணிபு வேதமுடிபும் ஆம். சற்குருநாதனுகி

எம்பெருமானே வாய்மையான மருத்துவன் — பவரோக வைத்தியன் என்பது பின்வரும் வேதவாக்காலும் நன்று புலப்படும்.

திருவாய் மொழி

"எருத்துக் கொடியுடையானும் பிரமனும்
[இந்திரனும் மற்றும்
ஒருத்தரும் இப்பிறவி என்னும் நோய்க்கு
[மருந்தறிவாருமில்லை
மருத்துவனாய் நின்ற மாமணி வண்ணா
[மறு பிறவி தவிரத்
திருத்தி யுன்கோயில் கடைபுகச் செய்
திருமாலிருஞ்சோலை யெந்தாய்."

நிறைமுறையோடு கூடிய அருந்தல் பொருந்தல்களாகிய தூலப் பயில்வுகளும் சூக்குமப் பயில்வுகளுமே மருத்துவனாகிய மாமணிவண்ணனால்—கண்மணியின் உண்மணியாய் — "உற்ற ஆக்கையின் உறுபொருள்" ஆய் நமது கற்றவப் பயனாய் முன்னிலையில் தோன்றிய குருநாதனால் அளிக்கப்படும் மருந்து ஆம். இத்தகைய பயில்வுகளைக் கைக்கொண்டு வழுவற ஒழுகுதலாற்றான் தூல சூக்குமங்கள் விளைவேறவேண்டும். சூக்குமம் விளைவேறாமல் தூலம் விளைவேறமாட்டாது. தூல சூக்குமங்களின் அந்நியோந்நிய சம்பந்தம் "வித்தகம்" இல. 45, இல் விளக்கமுற உரைக்கப்பட்டது. ஆங்குக் காண்க. "கோயில் கடைபுகச் செய்" என்பது விமலதேகம் (அமல முதற்படி) பெறுதலாகிய காயசித்தியையே உணர்த்தி நின்றது. முத்திவாயில் இதுவே என்க. இவ்வாறு உரிய சாதகங்களால் காயத்தை அசுத்தம் நீக்கி—ஊனம் நீக்கி விமலமாக்குதலே நோய்தீரும் வாயில் என்பது— காயசித்தி என்பது. காயசித்தி உடையோருக்குப் பிணி மூப்புச் சாக்காடுகள் உளவாகமாட்டா. மெய்யடியார் எல்லாம் உரிய சாதகங்களால் காயசித்திபெற்று நித்தியத்துவம் அடைந்தவரேயாவர். இதுவே முத்தி நெறி என்பது — இஃதன்றி முத்தி நெறி வேறில்லை என்பது இதுவரை "வித்தக" வாயிலாக வெளிவந்த கட்டுரைகள் பலவற்றால் பிரபல சுருதிப் பிரமாணங்களோடு நன்று வலியுறுத்தி நிலைநாட்டப்பட்டதாதலின் அவற்றையே ஈண்டும் எடுத்துக்காட்டி விளக்குதல் மிகையாகும். இவ்வுண்மைகளை அறியும் ஆற்றலும் காதலும் இல்லாதார் சிலர் காய சித்தி பெற்று முத்தி அடைவது "சித்த மார்க்கம்" எனவும், சித்தர் வேறு மெய்யடியார் வேறு எனவும் காய சித்திக்கும் முத்திக்கும் யாது சம்பந்தமும் இல்லை எனவும், எவ்வாற்றானும் தூலம் பிணமாகி விழச் செத்துப்போவது தான் உன்னதமான சைவசமய முத்தி நிலையுமாம் எனவும் மனம் போனவாறு பிதற்றி அமைகின்றனர். போலிச் சித்தரையே வாய்மையான சித்தர் என மயங்குவதும், மெய்யடியார் ஒழுக்கங்களை வாய்மையாக அறிய முடியாமையும், முத்தி என்பதன் உண்மைப் பொருளை அறியாமையுமே இவர் இவ்வாறு பிதற்றி அமைவதற்குக்காரணமாகும். முத்தீ எனப்படும் முத்தி ஆனது காயத்தானன்றிப் பிறவாறு ஆக்கமுற முடியாது. அஃதாவது "உற்ற ஆக்கையின் உறுபொருள்" ஆகிய சிவ பரம் பொருள் — அருட் பெருஞ்சோதி உரிய சாதகங்களால் ஆக்கமுற்றுப் பூரணப்பட்டாலன்றிப் பிறவாறு முத்தியடைதல் அசம்பாவிதம் என்பது "வீடுபெற நில்" என்னும் கட்டுரையில் ("வித்தகம்" இல. 47.) நன்று விளக்கிக் கூறப்பட்டது. ஆங்குக் காண்க. காயம் அசுத்தம் நீங்கி அமலமடைந்தாலன்றி — காய சித்தி கைகூடப் பெற்றாலேயன்றி முத்தி நிலை முயற்கொம்பே என்பது பின்வரும் பிரமாணங்களாலும் நன்று வலியுறுகின்றது.

திருவாசகம்

"காய மாயத்தைக் கழித்தருள் செய்யாய்"
(டை. செத்திலாப்பத்து செ. 5.)

"செடிசேர் உடலைச் செலநீக்கிச் சிவலோ
[கத்தே நமைவைப்பான்"
(டை. யாத்திரைப்பத்து செ. 4.)

திருவாய்மொழி

"கயிற்றும் அக்காணி கழித்துக்காலி
டைப்பாசங்கழற்றி"

[அக்காணி — அஃகாணி = அசுத்ததநு — அசுத்தநிறை. காலிடைப்பாசம் = வாயுவில் உள்ள களிப்பு—தடிப்பு— அசுத்தம்.]

"உடலுள் புகுந்து நின்று ஊறல் அறுத்த
[வர்க்கு"
(ஊறல்—ஊனம்—அசுத்தம்)

காயசித்தி பெற்ற உண்மைச் சித்தர்களே மெய்யடியார் என்பது பின்வரும் பிரபல பிரமாணங்களால் நன்று வலியுறுகின்றது.

திருமந்திரம்

வெளியின் வெளிபோய் விரவிய வாறு
மொளியி னொளிபோ யொடுங்கிய வாறு
மளியி னளிபோ யடங்கிய வாறுந்
தெளியு மவரே சிவசித்தர் தாமே.
(டை—1-ம் தந்; உபதேசம் செ, 12)

[வெளியின் வெளிபோய் விரவிய வாறு—ஞானாகாசமாகிய அகண்ட வெளியோடு உடலகத்துள்ள தகராகாசம் சேர்ந்து ஒன்றுறும் முறைமை. ஒளியின் ஒளிபோய் ஒடுங்கியவாறு —"உற்ற ஆக்கையின் உறுபொருள்" ஆகிய சிவம் என்னும் செம்பொருள் அகண்டாகார அருட் பெருஞ்சோதியோடு ஒன்றுறும் முறைமை. அளியின் அளிபோய் அடங்கியவாறு—உடலகத்துள்ள அம்பு என்னும் அன்பானது அருளாய் ஆக்கமுற்று யாண்டும் நீக்கமற நிறைந்து நிற்கும் அருள்வடிவோடு ஒன்றுறும் முறைமை. இவற்றை அநுபவமாக அறிந்த மெய்யடியாரே சிவசித்தர் என்பது—தத்துவப் பெரியாராகிய மெய்யடியார் என்பது.]

சித்தர் சிவலோக மிங்கே தெரிசித்தோர்
சத்தமுஞ் சத்த முடிவுந்தம் முட்கொண்
[டோர்
நித்தர் நிமலர் நிராமயர் நீள்பர
முத்தர் தமுத்தி முதன்முப்பத் தாரே.
(டை-டை-செ. 13.)

[வாய்மையான சாதகங்களால் தன்னிலையாகிய காயம் அமல மடைதலால் உண்மைச்சித்தராகியமெய்யடியார்க்கு முன்னிலையாகிய மாயாப் பிரபஞ்சமும் அத்தன்மை உடையதாய்ச் சிவலோகமாகும். ஆதலின் "சித்தர் சிவலோகம் இங்கே தேரிசித்தோர்" என்று கூறப்பட்டது. சந்தமுடிபு—ஒலி பீடமாகிய நாதபீடம்; நாத அந்தமாகிய வேத அந்தம். அந்தத்தை அணிபவர் என்பது போதர "தம்முட்கொண்டோர்" என்று கூறப்பட்டது. நித்தர்—சாக்காடு நீங்கி நித்தியத்துவம் பெற்றவர். நிமலர்—அமல வடிவமுடையவர்—வாய்மையான காயசித்தி உடையவர். நிராமயர்—துன்பம் இல்லாதவர்—பசி பிணி மூப்பு இல்லாதவர். பூரமுத்தர்—அமலவடிவம் ஞானாகாசத்தில் கரைந்து மறைதலாகிய உண்மைச் சைவமுத்தி அடைதற்கு உரியவர். முத்திமுதல்—வீடு. முப்பத்தாறு—முப்பத்தாறு தத்துவங்களால் ஆய உடலம். இவற்றால் வாய்மையான சித்தரே மெய்யடியாராகிய தத்துவப் பெரியார் என்பதும் அவரே காயசித்தி பெற்று உண்மை முத்தி அடைதற்குரியவர் என்பதும் நன்று தெளிப்படுதல் கண்டு கொள்க.]

காயமும் அதன் கண் அபேதமாகக் கலந்துள்ள உணர்ச்சி வடிவான உயிரும் சத்துச் சித்தாய் அந்நியோந்நிய சம்பந்தம் உடையனவாதலின் காயசித்தியின்றி ஆன்மலாபம் உளதாதல்—சிவத்துவம் திகழப் பெறுதல் முயற்கொம்பே என்பது சொல்லாதே அமையும். காயசித்தி பெறுதலே காயத்திரியுமாகும். காயம் திரியும் தந்திரமாகிய காயத்திரி எல்லாம் வல்ல சித்தனாகிய குருநாதன் வாயிலாகவே அறிதற்பாலது. அத்தந்திரங்கள் தாம் தூலமும் சூக்குமமான பயில்வுகளாகிய சாதக யோகங்களால் அமையும். சடபேதம் கர்ம பேதங்களுக்கு ஏற்ற அருந்தல் பொருந்தல் என்னும் தூலமான பயில்வுகளாலும் நாதங்களாகிய சூக்குமம் வலுவடைதற்குரிய சூக்குமமான பயில்வுகளாலும், மௌன மந்திராதிக்ய வித்தை என்னும் மந்திர ஒலி ஆவியின் மகத்தான பஞ்சீகரணப் பெற்றியாலும், சூக்குமகற்பமாகிய மந்திர ஒலி (நாதம்) ஆவியின் பரிசத்தாலும் அசுத்த சத்தானது சுத்த சத்தாகத் திரிந்து—காயம் அணு அணுவாய் ஊனம் நீங்கி ஒளிமயமாகும்—விமலமாய் அமலமாகும் என்க. மலமாக்குரம்பையானது அமலக் குரம்பையாய் — பூந்தருத்தியாய்த் திரியும் என்க. காயம் திரியும் தந்திரமாகிய காயத்திரி அநுட்டானத்தின் பயன் இதுவே என்க. மாற்றிப் பிறத்தலாகிய — துவிஜத்துவம் இதுவே என்க ("வித்தகம்" இல. 38. நோக்குக) இவ்வாறு காயம் திரியப் பெற்றோரே—காயசித்தி பெற்றோரே நித்தியத்துவம் பெறுதற்கு உரியர்-உடலோடு மறைந்து உண்மை முத்தி அடைதற்கு உரியர் என்க.

திருமந்திரம்

நான்பெற்ற வின்பம் பெறுகவிவ் வையகம்
வான்பற்றி நின்ற மறைப்பொருள் [சொல்லிடி
னூன்பற்றி நின்ற வுணர்வுறு மந்திரந்
தான்பற்றப் பற்றத் தலைப்படுந் தானே.
(டி திருமூலர் வரலாறு செ. 13)

[வான்பற்றி நின்றமறை—எழுதாமறை—அமல ஓகார ஒலி. ஊன்பற்றி நின்ற உணர்வுறு மந்திரம்—மகாரம்—மௌன மந்திராதிக்ய வித்தை. மகாரம் ஊன் பற்றி நிற்பது என்பதனால் உடலின் மெய்ம்மையும் காயசித்தியின் இன்றியமையாமையும் வெள்ளிடைமலையாம். தான்பற்றப்பற்ற என்பது, மதிமுயற்சியால் உணர்ச்சி வடிவான அச்செம் பொருளை ஆக்கமுறச் செய்தலை உணர்த்தி நின்றது. இதனால் காயம் திரிதற்கு ஏற்ற மந்திரமாகிய மௌன வித்தையைப் பயிலுதல் கூறப்பட்டது.]

காயத்திரியே கருதுசா வித்திரி
ஆய்தற் குவப்பர் மந்திரமாங்குன்னி
நேயத்தே ரேதி நினைவுற்று நேயத்தாய்
மாயத்துட் டோயா மறையோர்க டாமே.
(டி 1-ம் தந். அந்தணர் ஒழுக்கம்செ. 3)

[சாவித்திரி என்பது ஒளிமயமான—ஞானசத்தி வடிவான அமல தநுவைக் குறித்தது. காயமாகிய அசுத்த தநுவானது அமல தநுவாக மாற்றமடைதலே காயம் திரிதல் என்பதன் பொருள் என விளக்கியபடி ஆம். காயத்திரி அநுட்டானத்தால் அன்பு ஆக்கமுற்று அருள்வடிவாகும். அன்பு என்னும் தேரில் ஏறி அஃதாவது அன்பை ஆக்கமுறச் செய்து அதன் மயமாய்—தூய உணர்ச்சி மயமாய் அமலம் பெற்று மாயத்துள் தோயாதவர்—பாசங்கள் பற்றுக்கள் அற்றவர்—காய மாயம் கழியப் பெற்றவர்—காயசித்தி பூரணமடையப் பெற்றவரே மறையோர் என்க. மறையோர்—வாய்மையான மறையைக் கண்டு ஓதப் பெற்றவர் அந்தணர் என்க. காயசித்தி பெற்றாலன்றி வாய்மையான வேதங்களை அறிதலும் ஓதுதலும் முடியாத காரியம். காம[illegible] வேதம் ஓத அருகனல்லன். காமத்தின் பயனை காதலுடையானுக்கே அப்பெற்றிகைகூடுவது. ஆதலாற்றான்,

"காதலாகிக் கசிந்து கண்ணீர் மல்கி
ஓதுவார்.."

என வேதம் ஓதுவார் இலக்கணத்தை வரையறுத்து அருளினர் ஞானசம்பந்தர்.

"காமநோயைவிட்டுநீர் கருத்துளே உணர்
[ந்தபின்
ஈனமற்ற காயமாய் இருப்பன் எங்கள்
[ஈசனே."

எனச் சிவவாக்கியர் அருளியதும் அறிக. "ஈனமற்ற காயமாய் இருப்பன் எங்கள் ஈசனே" என்றதனால் காயமே விமலமாய் அமலமாய் இறைவன் வடிவமாகும் என்பதும் அதுவே காயசித்தியின் பேறு என்பதும் காயசித்திபெறாத இடத்து இறைவனை அடைதல் முடியாத காரியம் என்பதும் நன்றாவலியுறுதல் கண்டுகொள்க. இக்காதலே கந்தழியின் பேருரு என்பதும் இதனை உடையவரே உபநயனம் உடையவர் என்பதும் "மாற்றிப்

"பிறத்தல்" என்னும் கட்டுரையில் கூறப்பட்டன. ("வித்தகம்" இல 38). எனினும் உபநயனம் என்பது காய சித்தி பெற்ற மெய்யடியார்க்கே உரியதாதலின் ஈண்டும் ஒரு சிறிது விளக்கமுற உரைக்கப்படுகின்றது. உபநயனம்பெறுதல் கண்ணப்பல் கண்புதைத்தல் (கண் பதித்தல்—கண்மலர் சாத்துதல்) முகத்தில் காலால் உதைத்தல் (கால் என்னும் வாயுவின் தடிப்பு நீக்கிக் கபால மேற்றல்) பொன் முடிசூடல் ("சேவடிக்கணம் சென்னி மன்னித்திகழ்"தல்) என்பன ஒன்றேயாம். கண்ணில் கருவிழி மையத்து அசையும் நீர் அசுத்தமானது. இவ்வசுத்தநீரை உரிய சாதகங்களால் மாற்றினால் அமலநீர் பெருக்கமுறும். இதனால் ஊனக் கண்ணால் காணமுடியாத சூக்கும சத்திகள் அனைத்தும் தோன்றும். இச்சத்திகளையே சுண்ணம் இடித்தற்குக் கருதியுடையவர்கள் என்று

"மாவின் வடுவகிர் அன்ன கண்ணீர்
வம்மின்கள் வந்துடன் பாடுமின்கள்"
(திருவாசகம் திருப்பொற்சுண்ணப்பதிகம்)

என்னும் திருவாக்கால் கூவி அழைத்தான் வாய்மையான உபநயனம் பெற்ற மாணிக்கம். "கண்ணீர் மல்கி" என்பதன் பொருள் இதுவே என்க. இது தான் காதலுடையார் இலக்கணம். "மலங்கினேன் கண்ணின் நீரைமாற்றி" (திருவாசகம் திருக்கழுக்குன்றப்பதிகம்) என மணிவாசகர் அருளியதும் அறிக. காயசித்தி பெறுதலாற்றான் கண்ணின் நீர் மாற்றமடைய வேண்டும். இதுதான் உபநயனம்—இரண்டாவது கண்—ஊனக்கண் மாற்றமடைதலால் உளதாகும் ஞானக்கண்—ஞான நேத்திரம் என்க. காயசித்தி பெறாதவர்—மாற்றிப் பிறவாதவர் ஞானநேத்திரம் உடையராதல் முயற்கொம்பே என்பது சொல்லாதே அமையும். பின்வரும் பிரமாணங்கள் உபநயனம் என்னும் கண்ணப்பலின் உண்மையை நன்கு புலப்படுத்தும்.

அப்பர் தேவாரம்

"கடிமலர்த்தமலர்க்கொன்றைச் சடை [யான்கண்டாய்
கண்ணப்பவிண்ணப்புக்கொடுத்தான் [கண்டாய்"
(ஷை திருமாற்பேறு திருத்தாண்டகம் செ. 6.)

கண் அப்பல்—அசுத்தத்தை மாற்றுதலால் கண்ணை அழகுபெறச் செய்தல்—கண்ணை அணிதல். ஊனக்கண்ணை ஞானக்கண்ணாக மாற்றுதல் என்பது பொருளாகும். விண் அப்பு—அமல நீர். விண்—ஞானாகாசம்.

சிவவாக்கியர்

விண்ணினின்று மின்னெழுந்து
வின்னொடுங்கு மாறு போல்
என்னுள் நின்று மெண்ணு மீசன்
என்னகத்திருக்கையால்
கண்ணினின்று கண்ணில் தோன்றும்
கண்ணறிவி லாமையால்
என்னுள்நின்ற என்னையும்
யானறிந்த தில்லையே.
(ஷை செ. 261)

உபநயனம் என்னும் ஞானக்கண் ஆனது ஊனக்கண் மாற்றமடைதலாற்றான் உளதாகும் என்பது "கண்ணில் நின்று கண்ணில் தோன்றும் கண்ணறிவு" என்பதனால் நன்றுவலியுறுதல் கண்டு கொள்க. இத்தகைய ஞான திருஷ்டியாற்றான் தன்னையும் தலைவனையும் அறியமுடியும் என்பதும், "சிவனே சிவன் சிவனே சிவன்" என்பதும் "கண்ணறிவிலாமையால், என்னுள் நின்ற என்னையும் யான் அறிந்த தில்லையே" என்பதனால் விளங்க வைக்கப்பட்டது.

"கண்ணிலே இருப்பனேகரும்கடல்கடைந் [தமால்........"
(ஷை செ. 240)

"...கண்ணார் அமுதமாய் நின்றான்......"
(திருவாசகம் திருவெம்பாவை)

என்பனவற்றாலும் கண்மணியின் உண்மணியாய் விளங்குபவன் "உற்ற ஆக்கையின் உறுபொருள்" ஆகிய இறைவனே என்பதும் நன்று வலியுறுகின்றன. ஞான நேத்திரம் என்னும் உபநயனம் பெறுவதற்கே—கண்மணியின் உண்மணியாகிய சிவம் என்னும் செம்பொருளை ஆக்கமுறச் செய்வதற்கே—காய சித்திபெறுதற் பொருட்டே மெய்யடியார் அருந் தவம் புரிவது. இதற்குத்தான் பாடு அதிகம். இவ் அரிய பெரிய தவம் கணப்பொழுதிற்றான் சின்னாட்களுட்டான் முடிவடைவதாகுமா? போலியான வேடம் பூசை முதலியவற்றாலும் இயற்கை விரோதமாகச் சரீரத்தை—கண்ணை ஊறுபடுத்துதல் முதலிய வன்செயல்களாலும் இப்பெற்றி கைகூடுவதாகுமா? ஒருவரே கண்ணப்பர் எனும் திருநாமத்தால் போற்றப்படினும் மெய்யடியார் எல்லாம் இயற்கை முறையான அரிய பெரிய தவத்தினராய்க் காயசித்தி பெற்றுக் கண்ணின் நீரை மாற்றி—கண்ணை அமலமாக்கி—உபநயனம் பெற்று உய்தியடைந்தவரேயாவர். கண்ணப்பல்—ஞானப்பால் உண்ணல்—ஞானசம்பந்தம் பெறுதல்—திருநாப்பேறு, மாணிக்கப்பேறு, சுந்தரவடிவமாகிய விமல யாக்கைப் பேறு என்பன எல்லாம் காய சித்தியாகிய ஒரே உண்மையையே கருதியனவாகும். காய சித்தி பெறாத விடத்துத் தத்துவங்களை அநுபவமாக்காணுதல்—வெல்லுதல்—அடிமை கொள்ளல் முயற்கொம்பேயாகும். பத்தி மேலீட்டினால் மெய்யடியார் சரித்திரங்களைச் சிறந்த செய்யுட்களாகயாத்து வைத்த பௌராணிகரும் தலபுராணிகருமாகிய புலவர் பெருமக்கள், உலகினர்க்கு கடவுள் மாட்டுப் பத்தி வைராக்கியம் முறுகி வளரும்படி அன்னார் பக்குவம் நோக்கி அச்சரித்திரங்களை அமைக்க வேண்டியவராயினர். ஆதலால் அன்னார் பரிபாஷைகளாகிய கற்பனைகளின் உண்மைப் பொருளைக் கூறாது தூலப் பொருளையே கதைரூபமாக ஒருவாறு விளக்கிக் காட்டியமை குற்றமாகாது என்க. பிற்றைஞான்று அச்சரித்திரங்களாகிய கற்பனை விசேடங்களுக்கு ஏற்றவாறே கற்பனையான

அறிகுறிகளும் உலகோர் வழிபாட்டு முறைகளும் அமைய வேண்டியன ஆயின. விரிப்பிற் பெருகும். அமயம் நேரும்போது விரித்துக் கூறப்படும்.

(இடைக்காட்டுச் சித்தர் பாடல்)

கண்ணுண்மணியை கருதியபேரொளியை
விண்ணின்மணியை விளக்கொளியைப் [போற்றீரே.
கண்ணாடியுன்னுள்ளே கண்டு கொள்ளுங் [கோனே—ஞானக்
கண்ணின்றிக் கண்ணாடி காணவொண்ணா [தெங்கள் கோனே.

விண்ணைப்பார் தன்னைப்பார் மண்ணைப்பாரு
மேன்மை பெற சிவனருளை மேவிப்பாரு
பெண்ணைப் பார்த்தலையாதே பெண்தான் [தேகம்
பிரியமுடன் தேகமதைப் பேணிப் பார்த் [தால்
கண்ணப்பா துலங்குமடா அந்தக் கண் [ணால்
காணலாம் வெகு சித்திகண்ணிற் காணும்
மண்ணப்பா என்ற சடம் தன்னைக் காணு
மார்தருருக்கு என்னும் மண்தானே.

“எனவும்” தேகமே வாய்மையான பெண் என்பதும், காயசித்தியினுற்றான் கண் விளக்கமடையும் (கண் அப்பல்) என்பதும் அதுவே ஞான க்ஷேத்திரம் என்பதும் இச்செய்யுளால் நன்கு புலப்படுதல் கண்டுகொள்க. காயம் சித்தியடைதற் பொருட்டு அக் காயத்துள்ள அசுத்த நிறை என்னும் அழுக்கு நீங்கவேண்டும். இதனையே “மூவடி முப்பது” என்னும் அரிய தமிழ் மறையில் “அழுகை” என்னும் அத்தியாயத்தால் அருளிப் போந்தனர் நமது இடைக்காடர் பெருமான் என அறிதற்பாற்று.

மூவடி முப்பது

ஒழிபு

சூத்தம் 28. அழுகை.

“உறுதுயர் தடுக்குநர் பெருந்துணையுய்வின்
மறமீர் கழுவாய் மறைநுவல் தொன்மொழி
இம் மூன்றுடைமையின் அழுகையும் இய
[லபே”

தத்துவப் பெரியாராகிய மனிதர்கள்—தவத்தால் மனிதரானவர்கள்—மானிடச் சட்டையால் மனிதர் எனப்படாது ஆறறிவுபூரணம் பெற்றமையால் வாய்மையான மனிதரானவர்கள் திருவாய் மலர்ந்தருளிய அநுபவத் திரு வாக்குக்களாகிய ஆழ்ந்த கருத்துடைய அருமறைகளுக்கு, தற்காலமுந்தான் முற்காலமுந்தான் மற்று எக்காலமுந்தான் இடுகுறிப் புலவராயுள்ளவர்கள் இடுகுறிக்கு இணங்கிய கருத்துக்கொண்ட உரையையே எழுதுவாரன்றி, அவர்கள் அறியப்படாத—அறியமுடியாத காரியங்களை எவ்வாறு எழுதுவர்? எழுதுவது முடியாத காரியமே! அழுகை என்றால் என்னை? கண்களில் நீர் வடிதலை அழுகை என்பர். அஃதாவது சூக்கும தாதுக்கள் அக்கினியால் தகிக்கப்பட்டுக் கலங்க அவ் அக்கினி லலாடத்தைத் தாக்க அதனைச் சகிக்கலாற்றாது கண்களில் நின்றும் ஊன் நீர் வெளியேறுதலை அழுகை என்பர். எம் போலிய உலக மாக்கள் தங்கள் தங்கள் ஆக்கம் கருதியும் தந்தை தாயர் பெண்மர் பிள்ளைகள் உறவினர் ஆக்கம் கருதியும் கேட்டால் வருந்தியும் நீலிக்கண்ணீர் வடித்துப் புலம்புவார்கள். இந்த அழுகையாகிய நீலிக் கண்ணீரை “உறு துயர் தடுக்குநர்பெருந்துணை” எனவும், “உய்வின்மறமீர்கழுவாய்” எனவும் “மறை நுவல் தொன்மொழி” எனவும் விதந்து கூறுதல் வித்தையினும் வித்தை அல்லவா? ஐயாட்டைச் சிறார்கட்கு அல்லவா தகுதியுடையது இத்தகைய மதிப் பொலிவு? இந்த அழுகை என்னும் நீலிக் கண்ணீர்தானா முற்கூறிய மூன்று காரியங்களையும் அளிக்கும் ஆற்றலுடையது? இந்த அழுகை இத்தகைய பயப்பாட்டினை உடையதாகுமா? இதனைத்தானா வேதம் முறையிடும் பழமொழி என்பது? ஈதென்ன அறியாமை! இன்னோரன்ன அரும்பொருள் பொதிந்த சூக்தங்களை “மூவடி முப்பது” என்னும் தமிழ்மறையில் மிளிர்கின்றன என அறிதற்பாற்று. மற்று இச்சூத்திரம் முதலிய உண்மைப் பொருள்தான் யாதோ எனின், அதுதான், காயத்துள்ள அழுக்கு (அழுகல்—அழுகை) என்னும் களிம்பு நீங்குதலால் அக் காயம் சித்திபெற்று—விமலமாய் அமலமாய் நித்தியத்துவம் பெறும் என்பதேயாகும். அழுகை அழுதல் அழுகல் என்பன ஒன்றே. இவை அசுத்தம் நீங்கல் அழிதல் எனப் பொருள்படும். அழுங்கல் என்றால் வருந்துதல்—நைதல்—கெடுதல் என்பர். அழுகல் என்றால் ஊத்தை என்பர்; மலம் என்பர். அழுகல் அழுக்கு அசுத்தம் மலம் என்பன. ஒன்றே. ஆகாரபீஜயோனி விகாரத்தால் (“வித்தகம்” இல 19 பார்க்க) அஃதாவது முன்னிலைகளை நிறைமுறையோடு பஞ்சீகரணித்தலாகிய அருந்தல் பொருந்தல் அனந்தல்களால் காயம் அழுக்கு நீங்கி வசப்படுதலே—சித்திபெறுதலே—சுத்திபெறுதலே—அமலமடைதலே அழுகை என்பதனால் போந்தபயன் எனக்குறிக்கப்பட்டது. சரீரத்துள்ள ஒன்பது வாசலாலும் மயிர்க்கால்களாலும் ஒழுகுவது அழுக்கு—அழுக்கு என்னும் மலமே ஆதலால் அழுகை என்பது சரீரத்தினின்று வெளியேறும் அழுக்கையே—மலத்தையே—அசுத்த நிறையையே குறித்ததாகும். அதி உஷ்ணத்தால் ரோமயோனிகள் (மயிர்க்கால்கள்) வழியாய் வெளியேறும் வியர்வை அழுகை அல்லவா? காமாக்கினி என்னும் புழுக்கத்தால் லிங்கங்கள் வழியாய் (ஸ்திரீ லிங்கம் புருஷலிங்கம்) வெளியேறும் சுரதநீர் அழுகை அல்லவா? ஆனந்தக் கண்ணீர் என்கின்றனரோ உலகோர். அதுவும் கண்ணால் வடியும் நீர்தானே? மேலே கூறிய அழுகைக்கும் ஆனந்தக் கண்ணீருக்கும் உள்ள இடையீட்டின் பெட்புத்தான் என்னை?

திருவாசகம்

“ஆனல் வினையேன் அழுதால் உன்னைப் பெறலாமே”

(ஷை திருச்சதகம் ஆனந்த பரவசம் செ.10)

என்றது மாணிக்கம். மேலே கூறிய கண்ணீர் வடிதல் என்னும் அழுகை.

தானா இது? இத்தகைய அழுகையாற்றானே மாணிக்கமணியாகிய நம் கண்மணி "பல்லோரும் ஏத்தப் பணிந்து" வானிற் கலந்தான்? மிகச் சுலபமான காரியமன்றோ இது? சிரமமின்றிப் பயிலக்கூடிய சாதகமன்றோ இது? ஓ! ஓ! தத்துவப் பெரியாராகிய உத்தமரெல்லாம் மூதேவியால் ஆவேசிக்கப்பட்டு ஓவாது அழுதுகொண்டே இருந்தனரா? பளா! பளா! நன்று! நன்று! இதுதான் தூலப்பொருள்; போலிப் பொருளாகிய பொய்ப்பொருள். இச்சூத்திரத்தின் உண்மைப் பொருள் அமயம் நேர்ந்துழி விரிவுற விளக்கிக் கூறப்படும்.

"ஆனால் வினையேன் அழுதால் உன்னைப் பெறலாமே" என்று கூறிய மாணிக்கம் வாய்மையான அழுகை இன்னது என்பதனையும் அதனாற்றான் காயசித்தி உளதாகும்—காயம் அழுக்கு நீங்கி விமலமாய் அமலமாய் அதனுள் எம்பெருமான் பூரணமாகக் குடிபுகப் பெறுதலால் நித்தியத்துவம் உளதாகும் என்பதனையும் குறிப்பிட்டது.

திருவாசகம்

என்புள் ளுருக்கியிருவினை யைப்பீடழித்துத்
துன்பங் களைந்து துவந்துவங்கள் தூய்மை [செய்து
முன்புள்ள வற்றை முழுதழிய வுள்புகுந்த
அன்பின் குலாத்தில்லை யாண்டானைக் [கொண்டன்றே.

(ஷை குலாப் பத்து, செ. 3.)

என்பின் உள்ளே இருக்கும் மஜ்ஜை உருகி உருகிப் பக்குவம் பெறுதலாற்றான் அமலமடைதலாற்றான் இருவினையின் ஏற்ற இறக்கம் விடுபடும். அவை சமப்படும். அதனால் துன்பம் ஒழியும்; தன்மை முன்னிலை படர்க்கைகளாகிய (தன்னிலை முன்னிலைகள்) துவந்துவங்கள் தூய்மை அடையும், அழுக்கு அகத்த நிறை—செடியார் ஆக்கை—மருளுடம்பு நீக்கும்—மாற்றமடையும். அஞ்ஞான்று எம்பெருமான் பூரணமாகக் குடிகொள்வன்.

"புறப்பட்டுப் போகான் புரிசடையோன்,' உடலும் உயிரும் ஒழிவற ஒன்றி நித்தியத்துவம் பெறும். "ஈனமற்ற காயமாய் இருப்பன் எங்கள் ஈசன்" (சிவவாக்கியர்)

திருமந்திரம்

தானவ னாகுஞ் சமாதிகை கூடினா
லான மலமற மப்பசுத் தன்மைபோ
மீனமில் காய மிருக்கு மிருநிலத்
தூனங்க ளெட்டு மொழித்தொன்று வோர் [கட்கே.

(ஷை—8-ம் தந். அவத்தை பேதம். 179.)

இதன் விளக்கமான உரையைச் "சமாதி" என்னும் கட்டுரையில் காண்க. "ஈனமில்காயம்"—ஊனம் அறவே ஒழிந்து ஒளிமயமான அமல வடிவம்—ஓ வடிவம். இவ்வடிவமே அருளாய் வெளியாய் உலகு கண்டிட ஞானாகாசத்தில் மறைவது. இதுவே நித்தியத்துவம் எனவும் மீண்டு வாரா நெறியாகிய உண்மைச் சைவமுத்தி எனவும் முன்னும் பல கட்டுரைகளில் நன்று விளக்கி நிலை நாட்டப்பட்டது. உண்மை இவ்வாறாக "காய சித்திக்கும் முத்திக்கும் யாது சம்பந்தம்?" எனவும் "பக்குவக்குறைவுடையோரும் காய சித்தி பெறுகின்றார்" எனவும் காயம் பிணமாகிக் கழியச் செத்துப்போவதும் முத்திதான் எனவும் ஆராயாது குழறுவார் மதிப்போலிவுக்கு என் செய்வது? பக்குவக்குறைவுடையோரும் காயசித்தி பெறுகின்றார் என்பதன் பொருள் என்னை? மாற்றிப் பிறக்கும் வகையைக் குருவருளால் அறிந்து உய்தியடையும் பக்குவம் பெறாதார் சிலர் நிறை முறை அறியாது முன்னிலைக்கருக்கள் சிலவற்றைப் பஞ்சீகரணித்தலால் — சில மருந்துகளை அருந்துதலால் அசுத்த தநுவாகிய மருளுடம்பைச் சிலகாலம் அழியாது இருக்கும்படி செய்வதும் உண்டு. நிறை முறை இல்லாச் சாதகங்களால் அழுக்கு நீங்கப்பெறாத—அழுக்குத்தடிப்பேறிய இவர் தம் அசுத்த சரீரம் பௌதிகங்களின் பேதப்படுதலால் அழிந்து படுவதேயன்றி—பரிதாபகரமான மரணமே இவர்க்கு நேர்வதன்றி வாய்மையான காயசித்தி உளதாதல் — நித்தியத்துவம் உளதாதல் முயற்கொம்பேயாகும்.

திருப்புகழ்

"அநித்தமான வூன் நாளும் இருப்பதாக [வே நாசி
அடைத்து வாசி யோடாத வகை சாதித்
தவத்திலேகுவான் மூலிபுசித் துவாடு [மாயாச
அசட்டு யோகி ஆகாமல்.................."

என அருணகிரி நாதர் அருளியதும் அறிக. வாய்மையான காயசித்தி பெற்று நித்தியத்துவம் அடைதல் பலகோடி சென்ம நற்றவப்பயன் திரண்டு ஒருவடிவெடுத்த வித்தகராய்ப் பூரணமான பக்குவமுடையார்க்கே யன்றி உபாசக நிட்டையாளர்க்கும் அசட்டுயோகிகளுக்கும் பிறர்க்கும் கைகூடுவது முயற்கொம்பேயாகும் என்பது சொல்லாதே அமையும்.

காய சித்தி இன்றி அறமுதல் நாற்பொருட் பயனை அடைதல் முடியாத காரியமேயாகும். காயசித்தியே முத்தி நெறி என்னும் வேத உண்மையை அறியாது சில நடைகொடு பாவனைகளால் காயம் பிணமாகிக் கழிந்தபின் வேறு எங்கோ சென்று சுலபமாக முத்தியைப் பெற்றுவிடலாம் எனத் துணிந்து சாதலை எதிர்பார்த்துச் சோம்பேறிகளாய் வீற்றிருப்போரையே "முத்திநெறி அறியாத மூர்க்கர்" என வற்புறுத்தியருளினார் மணிவாசகப் பிரபு என அறிதற் பாற்று. காயசித்தி பெற்றமைக்கு அறிகுறி யாது? அதுதான் "மணங்கமழ் தெய்வத்து இளநலம்" பெறுதல் என்று கூறப்படும். மலம் விமலமாதல்—மலபரிபாகம் பெறுதல் என்பது இதுவே—அத்தழிப்பேறு இதுவே — முத்திவாயில் இதுவே என்க. இவ்வுண்மை பலகாலமாய் மறைபொருளாயினமையால், இதனைத் தற்காலத்தவர் ஒப்புக்

[illegible] -600090

ஈழநாடும் தமிழும்

(47-ம வாரத்தொடர்ச்சி)

பீதாம்பரப் புலவர்

இவர் ஏறக்குறைய அறுபது வருடங்களுக்கு முன்னே நீர்வேலியிலே வேளாண் குலத்திற் பிறந்தவர். இவர் தந்தையார் பெயர் சண்முகம்பிள்ளை. அவர் ஊர் மானிப்பாய். இவர் தாயார் ஊரே நீர்வேலி. இவர் தெல்லிப்பழையிலே அமெரிக்க மிஷனால் தாபிக்கப்பட்ட ஆங்கில வித்தியாசாலையிலே சிறிது காலம் ஆங்கிலம் கற்றனர். பின் அதனை விடுத்து இருபாலைச் சேனாதிராயமுதலியாரிடம் சென்று தமிழ் இலக்கண இலக்கியங்களைக் கற்றனர். கற்று அவற்றில் மிகச்சாமர்த்தியமுடையராயினமையன்றிப் பாடுதலினும் மிகச் சாமர்த்தியமுடையராயினர். இவர் பாடிய பிரபந்தங்கள் மறைசைக் கலம்பகம். மறைசைத் திருப்புகழ், நீர்வை வெண்பா, வல்லிபுரநாதர் பதிகம் முதலியனவாம். இவர் பாடற்றிறமறிய மறைசைக் கலம்பகத்திலும், வல்லிபுரநாதர் பதிகத்திலும் ஒவ்வோர் செய்யுள் முறையே தருதும்:—

மறைசைக் கலம்பகம்

மேவுமலை மானை விழைவோ டிடம்வைத்து
வாவுமலை மானைமுடி வைத்தவா—காவை
[மேல்
வந்துவழங் கும்மறைசை வானவா வாழ்த்
[தெனக்கு
வந்துவழங் குன்றுண் மலர்.

மலைமான்—உமாதேவி, வாவும் அலைமான்—கங்கை. வந்து—காற்று. மறைசை—வேதாரணியம்.

வல்லிபுரநாதர் பதிகம்

தேமேவு மாலயன் தேடியுங் காணுதசிற்
[பரற்குரிய மலையைத்
தேரா தகர்ந்தைகொடு பாரோ டெடுத்
[திடுஞ் செப்பரிய நிரனிருதனைப்
பூமேவு சாரசரர் போற்றுபொடு தநிக்கவே
[பூவைகுல நிலைகுலைப்
போரகத் திருபது சிரங்களு முருண்டிடப்
[பொருதபுய பலராமனே
கார்மே வரங்கம் பொருந்துகா குத்தனே
[காமனைப் பெற்றகண்ணா
காசினி விசும்பங்கி சுமலமா லானவா சம்
[பேற கையினுனே
மாமேவு குல்லைசெறி மார்பனே மாயனே
[மகிழ்விறு டனென்மேயுள்வாய்
வல்லிபுர நகர்வாச வல்லிக்க லீடைவனச
[வல்லிமகிழ் நேயமாலே.

(தொடரும்)

ஸர்வம் ப்ரஹ்ம மயம்

கொள்வது முடியாத காரியமே. இதையே வெள்ளைக்காரர் சொன்னால் ஒப்புக்கொள்வர். முன்னிலை தன்னிலைகள் ஒருங்கே அமல மடைதலால் இரண்டும் ஒன்றாகி "ஸர்வம் ப்ரஹ்ம மயம்" என்னும் வேத உண்மையை வாய்மையில் காண்டலே நித்தியத்துவ நெறியாகிய முத்தி நெறியாகும். இத்தன்மைவாய்ந்த தத்துவப் பெரியாரே பிரமவாதிகளாவர். இவ்வாறு வாய்மையான சாதகங்களால் தன்னிலை முன்னிலைகள் ஒன்றாகப்பெறாது மாயைவலைப்பட்டு மாண்டு பிறவி வலைப்படுவோரே மாயாவாதிகள் ஆவர். மேலும் விரிப்பிற் பெருகும்.

இது காரும் கூறியவைகளால் தூய சித்தியின் இலக்கணமும், அத்வைத முத்தி நெறி என்பது தத்துவப் பெரியார் அனைவரும் வேத உண்மையுமாம் என்பதும், மெய்யடியாரே வாய்மையான சித்தர் என்பதும், வாய்மையான தூய சித்தி பெறுதார் முத்தி நெறி காண்டல் முயற்கொம்பே என்பதும் ஒருவாறு உணரத்தகும்.

ஓம்!

அறிவிப்பு

கடிதர்களின்

அபிப்பிராயங்களுக்கு

அவர்களே பொறுப்பாளிகள்.

திருவாசக உண்மை

தென்கோவைத்தமிழ்ப்பண்டிதர்
ஸ்ரீமான் க. [illegible]நகைபிள்ளை
(வித்தகப் பத்திரிகை
பேராசிரியர்) அவர்களால்
எழுதப்பட்டது

கடவுள் தமது அருமைத் திருக்கரத்தால் எழுதி அகில சீவர்கள் உய்யும் பொருட்டு உதவியருளியதும், மாணிக்கவாசகர் அருளிச் செய்ததும் தெய்வத் தமிழ் வேதமுமாகிய திருவாசகத்தின் உண்மைக் கருத்துக்களை நன்கு விளக்கி வசன நடையில் எழுதப்பட்டது.

வேண்டுவோர் 2¾ அணு தபால் முத்திரை அனுப்பி பெற்றுக் கொள்ளலாம்.

நந்தி வெளியீட்டு மன்றம்
புதுவை.

சுத்தசாதகம்

துறவின் நன்மையையும், தேகம் சித்திபெற்றால் முத்தியுண்டாமென்பதன் நன்மையையும், சாதன சதுஷ்டயத்தின் நன்மையையும், மகாவாக்கியத்தின் பொருளையும், சொரூபானுபவத்தின் நன்மையையும், வேதாகமங்கள் கருத்துவகையால் வேறுபாடின்றியிருக்கும் வகையையும், தத்துவ ஞானத்திற்குப் பரம்பரா சாதனமாயுள்ளவைகளின் நன்மையையும் உள்ளங்கை நெல்லிக்கனிபோல் செப்பமாக விளக்கியுள்ள இந்நூல் துக்க நிவர்த்தியிலும் பரமானந்தப் பிராப்தியிலும் இச்சையுள்ள ஒவ்வொருவருக்கும் அத்தியாவசியமாய் அறிய வேண்டற்பாலதா மென்பது குன்றின் மேலிட்ட விளக்காம்.

வேண்டுவோர் அணு 0—[illegible]
தபால் முத்திரை அனுப்பி
பெற்றுக் கொள்ளலாம்.

நந்தி வெளியீட்டு மன்றம்.
புதுவை. (F. India)

Saudnapam Printing Works. Pondicherry. Le Gérant R. Nagarattinam.